# வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்த வான்புகழ்

ஜீவி.பெ
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் ஆசிரியர், லிஸ்யு சி.எம்.ஐ பப்ளிக் பள்ளி
சரவணம்பட்டி, விசுவாசபுரம், கோவை - 35

17

**ஆய்வுச் சுருக்கம்**

"அணுவைப் பிளந்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்"

என்னும் ஔவையின் வாக்கு திருக்குறளில் அறிவியல் பொதிந்த கருத்துகள் எத்துனையோ இருக்கும் என்பதனை தெளிவுபடுத்துகிறது. அறிவியல், மருத்துவம், கணிதம், அறிவியலின் பல்வேறு படிநிலைகள் அனைத்துமே ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தன் சிந்தனைத் துளிகளைக் கருத்துகளைப் பல ஆண்டுகளுக்குப்பின் பற்பல ஆய்வுகள் செய்து பல அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்ட செய்திகளை அன்றே கூறியுள்ளார். திருக்குறளில் அறிவியல் இடம்பெற்றுள்ளது என்பதனை இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது.

**திறவுசொற்கள்**

மக்கள் மனதில் குறள் வள்ளுவரின் அறிவியல் கண்ணோட்டம் சாப்பிடும் முறை
உடல் பாதுகாப்பு மழை பற்றிய அறிவியல்

## முன்னுரை

திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல். வாழ்க்கையின் தத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்தவர்களுக்கும் இப்போது வாழ்ந்துகொண்டு இருக்கும் நமக்கும்; இனி வரப்போகும் நமது தலைமுறைக்கும் எப்படியெல்லாம் வாழ வேண்டும் என்பதனைக் கற்றுக் கொடுத்த ஒரு தத்துவ ஞானி வள்ளுவன். இன்றைக்கு விஞ்ஞானத்தால் கண்டுபிடிக்கப்பட்டதை அன்றே சொன்ன மேதை வள்ளுவப் பெருந்தகை உலக மக்கள் ஒவ்வொருவரும் செய்யும் நல்லது கெட்டது அனைத்தையும் அவரவர் புரிந்து கொள்ளும் வகையில் ஏழு வார்த்தையில் புரிய வைத்த மாபெரும் மனிதன் வள்ளுவன். வள்ளுவன் இவ்வுலகம் மற்றும் அதன் இயக்கம் இயல்பு இரவுபகல் இன்னும் இதுபோல் பல நிகழ்வுகளைக் குறித்து நன்கு அறிந்திருந்ததை அவர் தம் ஒன்றரை அடியில் விளக்கியுள்ளார்.

## மக்கள் மனதில் குறள்

திருக்குறளைப் ஏன் படிக்க வேண்டும்? எதற்க்காக படிக்க வேண்டும்? என்று கேட்பார் யாரும் இருப்பதாக தெரியவில்லை. படித்தவருக்கு ஏதோ ஒரு காரணத்திற்காக குறளை விரும்புகிறான் என்றால் படிக்காதவர்கள் காரணமே தெரியாமல் விரும்பும்மளவிற்கு குறளின் ஈர்ப்பு உள்ளது. அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பிரிவில் இயற்பியல் வேதியல் உயிரியல் என்று அறிவியல் கருத்துகளை அன்றே மக்கள் விரும்புவர். மக்கள் விரும்பும்

கருத்துகளை உள்ளத்தில் உள்ளது போல் மகான் வள்ளுவன் சொல்லியதால் மக்களும் தன்னையும் அறியாமல் திருக்குறளை விரும்புகின்றனர். அதிகாலையில் எழுந்தவுடன் திருக்குறளை படிக்கும் பழக்கத்தை விக்டோரியா மகாராணி வைத்திருந்ததாக வரலாறு சொல்கிறது. அந்த அளவிற்கு குறள் மக்களைத் தன் வயப்படுத்தியுள்ளது.

**வள்ளுவரின் அறிவியல் கண்ணோட்டம்**

அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்த பல செய்திகளை அன்றே சொல்லியுள்ளார் திருவள்ளுவர். இது சுருக்கமாகவும் தெளிவாகவும் இருப்பதே அதன் சிறப்பம்சம் ஆகும்

" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்பொருள் காண்பது அறிவு"

எப்பொருள் எத்தகைய தன்மைகளைக் கொண்டதாக இருந்தாலும் அது எப்படி காட்சி தந்தாலும் அது வெளித்தோற்றத்தால் எத்தன்மையைக் கொண்டு இருந்தாலும் அதன் உண்மைத் தன்மையைக் காண வேண்டும். இக்குறளில் சொல்லியுள்ள கருத்துகள் இடத்திற்கு ஏற்றவாறு உதாரணங்களுக்குப் பயன்படுத்தலாம் இயற்பியல் வேதியியல் உயிரியில் கணிதம் போன்ற அனைத்து அறிவும் இதில் பொதிந்து இருக்கிறது மின்னுவதெல்லாம் பொன்னுமல்ல வெளுத்ததெல்லாம் பாலுமல்ல என்னும் பழமொழிகளுக்கு ஏற்ப இக்குறளும் பொருளின் உண்மைத் தன்மையினை அறிந்த பின்பே செயல்பட வேண்டும் என்பதனை பல ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார்.

**சாப்பிடும் முறை**

அறக்கருத்துகளைச் சொல்லிய வள்ளுவப் பெருந்தகை அறிவியலையும் சொல்லாமல் இல்லை.

"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு" (943)

என்று உணவு அருந்தும் முறையை அன்றே சொல்லியுள்ளார். அற்றல் என்றால் முன்பு உண்ட உணவு செரித்தல் என்பது பொருள். பின் உண்ணப்போகும் உணவின் செரிமானத் தன்மையை அறிந்து உண்ணவேண்டும் என்பதே பொருள். அப்படி உண்டால் நெடுங்காலம் வாழலாம் என்பதே இதன் பொருளாக மு. வரதசாசனார் கூறுகிறார்.

மனிதன் தான் உண்ணும் உணவின் தன்மையை அறிந்து உண்ணுதல் வேண்டும் சுவைகளில் இனிப்பு புளிப்பு காரம் உவர்ப்பு துவர்ப்பு கசப்பு என்று இருக்கிறது இதில் எந்த உணவின் தேவை நமக்குத் தேவை என்பதை உணர்ந்து புரிந்து அளவறிந்து உண்ண வேண்டும் என்று இக்குறளுக்கு விளக்கமளிக்கிறார் சாலமன் பாப்பையா அவர்கள்

**உடல் பாதுகாப்பு**

நமது உடலினை எப்படியெல்லாம் பாதுகாக்க வேண்டும்? என்பதனையும் ஒரு வேளை நோய் வந்தால் என்னென்ன செய்ய வேண்டும்? என்பதனை குறளில் வெளிப்படுத்தியுள்ளார் வள்ளுவர் நோய்க்காண தன்மையையும் அது வருவதற்கான காரணத்தையும் அறிந்து அந்நோய் தீர்வதற்கான வழியையும் கண்டறிந்து உடலினை பாதுகாக்க வேண்டும் என்பதனை இவ்வாறு கூறியுள்ளார்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

இக்குறளுக்கு சிவயோகி சிவக்குமார் கூறும் விளக்காமாவது வாத பித்த சிலேத்துமம் என மூன்றில் அளவு கூடுவதும் குறைவதுமே நோயாகும். உண்ட உணவு செரித்தபின் போற்றி உண்பவருக்கு மருந்து தேவையில்லை. உணவை சரியாகத் தீர்மானித்தால் அளவை அறிந்து உண்டால் நோய் வராது. நோய் என்ன? ஏன் வந்தது? எப்படி தீர்ப்பது? எந்த மாதிரியான காலத்தில் வந்துள்ளது? என்பதை ஆராய்ந்து மருந்து எடுக்க வேண்டும். நோயுற்றவர், அதை தீர்ப்பவர், மருந்துகள், பயன்படுத்தும் அளவு சொல்பவர் என நான்கு கூறுகளை உடையது மருத்துவம். என்பதும் அதனைப் பற்றிப் படிப்பதும் இன்றைய காலகட்டங்களில் எட்டாக் கனி இல்லை. ஆனால் இந்த மருத்துவ அறிவியலை அன்றே கூறியுள்ளார் என்பது தான் விந்தையானது.

**மழை பற்றிய அறிவியல்**

மழை பெய்யாமல் வானம் ஏமாற்றினால் பாதிப்புகள் சொல்லிலடங்காது உயிர் வாழத் தேவையான ஒன்றில் நீரும் முக்கியப் பங்கு வகிக்கின்றது. எத்தனையோ நீர் நிலைகள் இருந்தாலும் மழைநீர் இல்லை என்றால் அனைத்துமே வற்றித்தான் போகும் சமுத்திரம் கூட வற்றிவடும் மேகங்கள் கடல்நீரை எடுத்துக்கொண்டு மீண்டும் மழைநீராய் மண்ணீற்கு வருகிறது. ஒரு வேளை வான் பெய்யாது பொய்துவிட்டால் இந்த அகன்ற உலமானது பல சிக்கல்கயையும் இன்னல்களையும் சந்திக்கும் என்னவெல்லாம் நடக்கும் என்பதனை வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்.

"விண்இன்று பொய்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி" (13)

மழை வேண்டுங்காலத்துப் பெய்யாது பொய்ககுமாயின் கடலால் சுழப்பட்ட அகன்ற உலகத்தின்கண் இருக்கின்ற உயிர்க் அனைத்தும் பசியால் வருந்தும் பசியின் காரணமாக உயிர்கள் இறந்தும் போகும் என்கிறார் பரிமேலழகர்

**உலகத்து**

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்" (17)

ஆவியான கடல்நீர் மேகமாகி மீண்டும் அந்தக் கடலில் மழையாகப் பொழியும் அப்படி மழையாகப் பொழிந்தால் தான் கடல்கூட வற்றாமல் இருக்கும். என்று கலைஞர் மு .கருணாநிதி விளக்கமளிக்கிறார்

**நீர்த்தாவரங்களின் அறிவியல்**

தரையில் வாழும் தாவரங்களும் உண்டு. நீரில் வாழும் தாவரங்களும் உண்டு. நீரில் வாழ்பவை நீரின் உயரத்திற்கு ஏற்ப உயரமாக வளரும். நீரின் அளவு குறைந்தால் தாவரமும் உயரம் குறையும். இந்த அறிவியலை அன்றே வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு" (595)

பல நூற்றாண்டுகளுக்கு முன்னே நீர்த்தாவரங்கள் எப்படி வளரும் என்பதனை கூறியுள்ளார். இவ்விஞ்ஞான முறையை பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த இசபெல்லா என்பவர.; நீர்த்தாவரங்கள் நீரின் தன்மைக்கு ஏற்ப தாவரங்களின்

தண்டுப்பகுதி உயரும் என்பதனை இன்றைய அறிவியலாளர் கண்டுபிடித்துள்ளார் இந்த அறிவியல் முறையை பல நூற்றாண்டுக்கு முன்னர் சொன்ன வள்ளுவர் ஒரு அறிவியல் அறிஞராகக் கூட இருந்திருக்கலாம் அல்லது அறிவியல் அறிஞர்களோடு தொடர்புடையவராக இருந்திருக்கலாம் என்று பேராசியர் சுப. வீரபாண்டியன் தன் மேடைப்பேச்சில் கூறியுள்ளார்.

“சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை” (1031)

**முடிவுரை**

வள்ளுவர் இவ்வுலகத்தின் இயக்கம் இப்புவியின் இயல்பு நிலை ஒவ்வொரு அறிவியலாலருக்கும் உள்ள தனித்தனி சிந்தனைகளையும் தன் எழுத்துக்களில் வடித்துள்ளார் ஆதி முதல் அந்தம் வரை அனைத்து அறிவியலையுமே பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கூறியுள்ளார் என்பது விந்தையான விசித்திரமானது.

இதனாலோ என்னவோ பாரதியார் இவரை

“வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட
தமிழ்நாடு” என்று புகழ்ந்துள்ளார்

**துணை நூற்பட்டியல்**

இணையவழியில்
பரிமேலழகர் உரை
மு. வரதராசன் உரை
சாலமன் பாப்பையா உரை
சிவயோகி சிவயோகி சிவக்குமார் உரை

நான் கண்ட முடிவு

பல ஆண்டுகளுக்கு முன்னர் வார்த்தையாக இருந்த அறிவியல் இன்று வாழ்க்கையாக மாறியிருக்கின்றது. இன்றைய சூழலில் அறிவியலும் நாமும் ஒன்றாகி விட்டோம்; பிரித்துப் பார்க்க முடியாத சூழலில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். அறிவியல் வளர்ச்சியை நோக்கிப் போனாலும் அழிவை நோக்கியும் போய்க்கொண்டுதான் இருக்கின்றது. இன்றைய இளைஞர்கள் அறிவியலை ஆக்கத்திற்கு மட்டும் பயன்படுத்தினால், நாளைய தலைமுறை வளர்ச்சியடையும் விண்ணை முட்டுமளவிற்கு.